Australian Government

Inspector-General of Taxation

Taxation Ombudsman

# வரி புகாரா?

Sri Lankan Tamil

# நாங்கள் யார்

இன்ஸ்பெக்டர்-ஜெனரல் மற்றும் வரிவிதிப்பு ஒம்புட்ஸ்மன் (ஐஜிடிஓ) (The Inspector-General & Taxation Ombudsman (IGTO)) என்பது அவுஸ்திரேலிய வரிவிதிப்பு அலுவலகம் (ஏரிஓ) (Australian Taxation Office (ATO)) மற்றும் வரித் தொழில் புரிபவர்கள் சபை (டிபிபி) (Tax Practitioners Board (TPB)) என்பனவற்றின் நிருவாக நடவடிக்கைகள் பற்றிய உங்கள் புகார்களுக்கு உங்களுக்கு உதவிசெய்வற்குப் பொறுப்பான ஒரு சுயாதீனமான மத்திய அரச முகவர் நிலையம் ஆகும்.



1300 44 88 29
(உள்ளூர் அழைப்பு செலவு)

# எங்களால் உங்களுக்கு எவ்வாறு உதவ முடியும்

உங்கள் புகார்களைத் தீர்ப்பதற்கு உங்களுக்கு உதவக்கூடிய ஒரு சுயாதீனமான, இலவச, வரி நிபுணர் சேவையை நாங்கள் வழங்குகிறோம்.

'நிருவாக நடவடிக்கை' என்பது பொதுவாக ATO அல்லது TPB இன் உங்களுடனான பரிவர்த்தனைகள் அல்லது தொடர்புகளின் நேர்மை மற்றும் நியாயத்தன்மை என்பனவற்றை உள்ளடக்கும் ஒரு பரந்த சொல் ஆகும்.

IGTO உங்களுக்கு உதவக்கூடிய எடுத்துக்காட்டுகள், பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக ஆனால் மட்டுப்படுத்தப்படாத வகையில் அமையும்:

- உங்கள் கோரிக்கைகளுக்கு பதில் அளிப்பதற்கான காலக்கெடு;
- ATO அல்லது TPB அதிகாரிகளின் நடத்தை;
- நேரலை சேவைகளின் கிடைக்கும் தன்மை;
- ATO அல்லது TPB இன் செயல்களின் விளக்கத்தின் உத்தரவாதம் அல்லது போதுமான தன்மை;

www.igt.gov.au

- ATO அல்லது TPB இன் நடவடிக்கைகளை அவற்றின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்க உறுதி செய்தல்; மற்றும்
- கணக்காய்வு மற்றும் விசாரணைகள் உட்பட நீங்கள் வழங்கும் அனைத்து தகவல்களையும் கருத்திற்கொள்வதுடன் ATO அல்லது TPB உங்களுடன் நியாயமான மற்றும் வெளிப்படையான முறையில் கையாள்வதை உறுதிசெய்தல்.

எங்களால் உங்களுக்கு உதவ முடியுமா என்பது உங்களுக்கு நிச்சயமில்லை எனின், தயவுசெய்து எங்களை தொடர்பு கொள்ளவும்.

எங்களால் உங்களுக்கு நேரடியாக உதவ முடியாவிட்டால், உங்களுக்கு உதவுதற்கு மிகவும் பொருத்தமான நிறுவனம் அல்லது அமைப்பு பற்றி ஆலோசனைகளை வழங்குவதற்கு எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வோம்.

GPO Box 551, Sydney NSW 2001

# புகார்கள் செயல்முறை

எங்கள் அலுவலகத்தில் உங்கள் புகாரை செய்வதற்கு, “எங்களை எவ்வாறு தொடர்பு கொள்வது” (How to contact us) எனும் பகுதியைப் பார்க்கவும்.

நீங்கள் புகார் செய்த பின்னர், IGTO விசாரணை அதிகாரி உங்களை 2 வர்த்தக நாட்களுக்குள் தொடர்புகொண்டு உங்களுடன் உங்கள் புகார் பற்றிக் குறிப்பிட்டு உங்களுடன் அது பற்றி கலந்துரையாடுவார்.

முடிந்தால் உங்கள் புகாரை நிவர்த்தி செய்ய நாங்கள் உங்களுக்கு நேரடியாக உதவுவோம்.

ATO அல்லது TPB உங்கள் புகாரை நன்கு புரிந்துகொள்வதற்கும், நாங்கள் உங்களுக்கு எவ்வாறு சிறந்த முறையில் உதவ முடியும் என்பதைத் தீர்மானிப்பதற்கும் உங்களிடமிருந்து மேலதிக தகவல்கள் எங்களுக்குத் தேவைப்படலாம்.

எங்கள் முன்னேற்றம் பற்றி நாங்கள் உங்களை இற்றைப்படுத்திக்கொண்டு இருப்போம், மேலும் செயல்முறை முழுவதும் எங்கள் விசாரணையின் காலக்கெடுவை உங்களுக்கு வழங்குவோம்.

# எங்களை எவ்வாறு தொடர்பு கொள்வது

**www.igt.gov.au**

**1300 44 88 29**
(உள்ளூர் அழைப்பு செலவு)

**GPO Box 551**
**Sydney NSW 2001**

ஆங்கிலம் தவிர வேறு மொழியில் புகார் செய்ய விரும்பினால், **131 450** எனும் இலக்கத்தின் ஊடாக மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்ப்பு சேவை (டிஐஎஸ்) (Translating and Interpreting Service (TIS)) ஐ அழைக்கவும்.

உங்களிடம் செவிப்புலன் அல்லது பேச்சு குறைபாடு இருந்தால், பொருத்தமான டெலிடைப்ரைட்டர் (டி.டி.வை) (TTY) அல்லது மொடம் கருவிகளுக்கு அணுகல் இருந்தால், அல்லது தொலைபேசி **13 36 77** இலக்கத்தின் ஊடாக தொடர்புகொள்ள முடியும்.

உங்களுக்கு TTY அல்லது மொடம் கருவிகளுக்கான அணுகல் இல்லையென்றால், **1300 555 727** என்ற இலக்கத்தின் ஊடாக ஸ்பீச் டு ஸ்பீச் ரிலே சேவைக்கு (Speech to Speech Relay Service) தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள்.